1974 மார்ச் 28]

உழவர்கள் கூட்டுறவு காகித ஆலைகள்

** 659 வினா*—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உழவர்கள் கூட்டுறவு காகித ஆலைகள் நிறுவப்படுவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த உழவர்கள் கூட்டுறவு காகித ஆலை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் இருக்கிறது, எங்கெங்கே நிறுவப்பட இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் புகளூர் என்ற இடத்தில் நிறுவப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 11 திட்டங்களைக் கொண்டது. ஐந்து நிறைவேறி நல்லமுறையில் இருக்கின்றன. 21.8 லட்சம் ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இன்று நாட்டில் காகிதப் பஞ்சம் பெருமளவில் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 15 பைசாவுக்கு விற்ற பத்திரிகை 25 பைசாவாக விற்கிறது. எனவே, நம்முடைய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த உழவர் கூட்டுறவு காகித ஆலையில் நியூஸ் பிரின்ட் தயாரிக்கும் திட்டம் இருக்கிறதா ? தமிழ்நாட்டில் காகிதப் பஞ்சத்தைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : காகிதப் பஞ்சத்தைப் போக்குவதற்காகத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது பயன்படும் திட்டமாக இருக்குமா ? திட்டம் முழுமையாக நிறைவேறினால் நல்ல லாபம் கிடைக்குமா ? என்பதைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து அறிக்கை கொடுப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினர் 30 நாட்களுக்குள் இந்தத் திட்டத்தை ஆராய்ந்து சொல்லவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது புகளூர் பகுதியில் உழவர் கூட்டுறவு காகிதத் தொழிற் சாலையை ஆரம்பிக்க உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள், ஆனால்

புகளூரிலிருந்து வேறு ஒருவரின் செல்வாக்கின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றுவதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி வேறு இடத்திற்கு மாற்றுவதாக இருந்தால், அதை என்னுடைய தொகுதியில் சின்னதாராபுரம் என்ற இடத்தில் அமைக்க அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னே. ப. நாராயணசாமி: உறுப்பினர் அவர்கள் பொதுநலத்தோடு கேள்வி போடுகிறார் என்று நினைத்தேன். ஆனல் அவர் சுயநலத்தோடுதான் கேட்டிருக்கிறார் என்பது கேள்வியின் முடிவில் தெரிந்தது. அவர் சொல்வது உண்மை அல்ல.

திரு. எஸ். வடிவேல்: சார், உழவர் கூட்டுறவு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவது மிகவும் அவசியமானது. அது எந்தெந்த வகையிலே அமைக்கப்படுகிறது? என்னென்ன விதிகளின்படி அமைக்கப்படுகிறது? தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பித்தால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயனடைவார்கள் என்ற வகையில் அங்கே அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி: அதற்குத் தேவையான உப பொருட்கள் புளிச்சக்கீரையும் அகத்திக்கீரையுமாகும். இந்தக் கீரை வகைகள் நஞ்சை நிலத்தில் உற்பத்தியாகாது; புஞ்சை நிலத்தில்தான் உற்பத்தி செய்ய முடியும். மேலும் இதற்கு 8,000 ஏக்கர் நிலப்பரப்பு தேவைப்படும் என்று கருதப்பட்டது. பரிசீலனை செய்ததில், 1,30,000 டன் புளிச்சக்கீரையும், கிட்டத்தட்ட 30 ஆயிரம் டன் அகத்திக்கீரையும் தேவை என்று தெரிய வந்தது. அதற்கு 9,200 ஏக்கர் நிலப்பரப்பு வேண்டும். அந்த அளவுக்கு நிலம் கிடைத்தால் மட்டும் போதாது; ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும். நீரேற்றுப் பாசனம் மூலம் இந்தக் கீரைவகைகளை பயிர் செய்தால் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர்தான் பயிரிட முடியும். ஆனல் தண்ணீரை தேக்கி வைத்து, 'ஸ்பிரிங்கிளர்' மூலம் தெளித்தால் 8,000 ஏக்கர் பாசன வசதி பெறும். இதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து அறிக்கை கொடுக்க குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்திற்குள் அறிக்கை கொடுத்துவிடுவார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் இந்த புளிச்சக்கீரையும் அகத்திக்கீரையும் உற்பத்தி செய்ய வாய்ப்பு இல்லாததால் அங்கே இந்த காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பது சாத்தியமல்ல.

1974 மார்ச் 28]

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டத்தில் உழவர் கூட்டுறவு காகித ஆலே அமைத்து, அங்குள்ள வைக்கோல் மூலம் காகிதம் உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : அப்படி ஒரு முயற்சி இதுவரையில் இல்லே. அதற்கான முயற்சிகளே ஆராய்ந்து பார்க்கலாம்.

Vehicles belonging to Co-operative Societies.

* 660 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether surcharge is imposed on Clerks for using vehicles in the Co-operative Societies without permission by the Government; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : (அ) & (இ) வண்டிகளைப் பேணி வருவதற்காகக் கூட்டுறவுச் சங்கத்தினல் கடைப்பிடிக்கப்படும் விதி முறைகள், கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள வண்டிகளைப் பயன்படுத்துவதற்குப் பொருந்துகின்றன. இதற்கு அரசின் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லே.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலேவரவர்களே, இப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான வண்டிகளில் பிரயாணம் செய்வதற்கு கட்டணம் குறைவாக இருக்கிறது. இப்போது இருக்கின்ற எரிபொருள் விலே யேற்றத்தின் அடிப்படையில் இந்த ரேட்டுகளே மாற்றி அமைக்க அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறதா ? அப்படியானல் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : வாகனங்களேப்பற்றி கேட்டிருப்பது—பிளஷர் கார், ஜீப் பற்றியது இந்தக் கேள்வி. மற்ற வாகனங் களேப்பற்றி அங்கத்தினர் அவர்கள் கேட்கிறர்கள் என்று கருதுகிறேன். அதற்கு தனிக் கேள்வி போடவும்.

Price of Coconut oil.

* 661 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Government are aware of the sudden spurt in prices of coconut oil in this State during October 1973; and

(*b*) if so, the action taken thereon ?